ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/36 - 2020 ජනවාරි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.23

*2159/36 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**02 ஆவது திருத்தம்**

இலங்கை நில அளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு

*2019, ஒற்றோபர் 04 ஆந் திகதிய 2143/52 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வரத்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட, 2018, திசெம்பர் 24 ஆந் திகதிய 2103/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நில அளவையாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு 2018, திசெம்பர் 24 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.*

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு,

அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, திசெம்பர் 24.

1A - G 31856 — 20 (2020/01)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**திருத்தம் செய்யப்பட்ட பந்திகள் :**

*10.3.1* VI சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

*11.2*

| பதவி | தகைமைகள் |
|---|---|
| (அ) நில அளவையாளர் நாயகம் | அமைச்சரவையினால் நியமிக்கப்படுவார் |
| (ஆ) மேலதிக நில அளவையாளர் நாயகம் | நில அளவையாளர் நாயகம் தவிர்ந்த இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் அடுத்துள்ள சிரேஷ்ட உத்தியோ கத்தர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலதிக நில அளவையாளர் நாயகப் பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். |
| (இ) சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் | நில அளவையாளர் நாயகம் மற்றும் மேலதிக நில அளவையாளர் நாயகங்கள் தவிர்ந்த இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தில் அடுத்துள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி நில அளவையாளர் நாயகப் பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். |
| (ஈ) பிரதி நில அளவையாளர் நாயகம் / மாகாண நில அளவையாளர் நாயகம் | இலங்கை நில அளவையாளர் சேவையின் விஷேட தரத்தின் உத்தி யோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி களுக்கு நியமிக்கப்படுவர். |
| (உ) சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் | நில அளவை அத்தியட்சகர் பதவிகளை வகிக்கும் இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களுள் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பதவிக்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர் (பதவிக்காக நியமிக்கும் போது பதிற்கடமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) |
| (ஊ) நில அளவை அத்தியட்சகர் | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்கள் தவிர்ந்த இலங்கை நில அளவையாளர் சேவையின் தரம் I அல்லது தரம் II இல் அடுத்துள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நில அளவை அத்தியட்சகர் பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். |

*02-89*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.